# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2245/30 - 2021 සැප්තැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.09.17

*2245/30 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கொழும்பு மாநகர சபை**

மாநகர சபை துணைவிதிகள்

*2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடைபெற்ற கொழும்பு மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில், தீர்மான இல. 2445 இன் கீழ், பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.*

**எம். டீ. எம். இக்பால்,**
கொழும்பு மாநகர முதல்வர் மற்றும்
இணை மாநகர முதல்வர்.

கொழும்பு மாநகர சபை,
*2021, செத்தெம்பர் 17.*

முன்மொழிவு

"1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட துணைவிதி) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், மாண்புமிகு உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களால் சட்ட முன்வரைவு செய்யப்பட்டு 1989, சனவரி மாதம் 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் மேல் மாகாண சபையால் உறுதிப்படுத்தப்பட்டதாக 1991, மே மாதம் 21 ஆந் திகதிய 663/5 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான மாநகர சபையின் துணைவிதிகளின் I ஆம் பகுதியின் துணைவிதியும் II ஆம் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள-

1. III ஆம் பகுதி - நிதிக் கட்டளை
2. V ஆம் பகுதி - ஒப்பந்தங்களுக்கான துணைவிதிகள்

எனும் துணைவிதிகள் கொழும்பு மாநகர சபையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட துணைவிதிகள் கொழும்பு மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் கொழும்பு மாநகர சபையால் முன்மொழியப்படுகின்றது."


1A - G 34906 — 22 (2021/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*